1982 மார்ச் 12]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முக்கால் மணி நேரத்தில் முடித்துவிட முடியுமா? அப்படியென்றால், இன்றைக்கே முடித்துவிடலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 3 மானியங்களின் மீது பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கேள்வி கேட்பது என்பது எளிது. அதற்கு பதில் சொல்ல வேண்டிய விளக்கம் அதிகம். பரீட்சையிலே கேள்வி ஒரு வரி தான் இருக்கும். அதற்கு எழுதுகின்ற விளக்கம் 3 பக்கங்கள் வரும். ஆகவே, பல்வேறு கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சரியாக விளக்கம் அளிக்கத் வேண்டுமென்றால், அது நீடித்துக் கொண்டுதான் போகும் ஆகவே, $2\frac{1}{2}$ அல்லது 3 மணி என்று போனாலும், நான் தாங்கத் தயார்.

திரு. சோ. அழகர்சாமி : நாளை காலை கேள்வி நேரத்தை எடுத்துவிட்டு, அந்த ஒரு மணி நேரத்தை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு எடுத்துக் கொள்ளலாம். இதற்கு மேலும் அவையை நீட்டிப்பது எல்லோருக்கும் கஷ்டமாக இருக்கும்.

(5) அரசினர் தீர்மானம்.

விதி—31 ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியே நாளை நடைபெறும் நிகழ்ச்சியில் கேள்வி நேரத்தை இதற்கு ஒதுக்கலாம். எனவே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ 13—3—1982-ஆம் தேதியன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 13—3—82 ஆம் தேதி காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.